## கரூர் நகராட்சி
## கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

2020ம் ஆண்டு ஆகஸ்ட்–31ம் நாள் திங்கள்கிழமை மாலை 5.00மணிக்கு கரூர் நகராட்சியின் மன்ற அவசரக் கூட்டம் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் திருமதி.கே.எம்.சுதா, பி.எஸ்.சி., எம்.ஏ., பி.எட்., அவர்கள் தலைமையில் மன்றக் கூட்டத்தில் நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

1)கரூர் மாவட்டத்தில் கரூர் நகராட்சி சிறப்புநிலை நகராட்சியாகும். இந்நகராட்சியுடன் அருகிலுள்ள இனாம்கரூர் பேரூராட்சி பகுதிகள், தாந்தோணி பேரூராட்சி பகுதிகள் மற்றும் சணப்பிரட்டி ஊராட்சி பகுதிகள் அரசாணை நிலை எண்.19, நாள்.14.01.2011ன்படி ஒருங்கிணைக்கப்பட்டு 53.26 சதுர கி.மீ., பரப்பளவில் 48 வார்டுகளைக் கொண்டுள்ளது. 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 2,14,412 ஆகும். கரூர் நகரமானது ஜவுளித் தொழில் ஏற்றுமதி செய்தல் மற்றும் பஸ் பாடி பில்டிங் பணிகள் அதிக அளவில் நடைபெறுவதால் வெளிமாநிலங்களில் இருந்து தொழிலாளர்கள் அதிகமாக வருகின்றனர். இதனால் நாள்தோறும் பணி நிமித்ததாக வந்து செல்லும் பயணிகள் சுமார் 50000 அளவில் உள்ளது.

இனாம்கரூர் பகுதியானது 1 முதல் 14 வார்டுகளையும், 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 67,131 பேரும் 22,408 குடியிருப்புகள் கொண்டு 11.26 சதுர கிலோமீட்டர் பரப்பளவிலும், கரூர் பகுதியானது 15 முதல் 32 வார்டுகளையும், 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 70,980 பேரும் 17,412 குடியிருப்புகள் கொண்டு 6.03 சதுர கிலோமீட்டர் பரப்பளவிலும், சணப்பிரட்டி பகுதியானது 33 முதல் 36 வார்டுகளையும், 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 22,447பேரும் 7,434 குடியிருப்புகள் கொண்டு 7.68சதுர கிலோமீட்டர் பரப்பளவிலும் மற்றும் தாந்தோணி பகுதியானது 37 முதல் 48 வார்டுகளையும், 2011ம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி 53854பேரும் 20,182குடியிருப்புகள் கொண்டு 29.29சதுர கிலோமீட்டர் பரப்பளவில் அமைந்துள்ளது.

கரூர் நகரின் மையப்பகுதியில் சின்னாண்டாங்கோவில் முதல் காமதேனு நகர் வரை 3700.00மீட்டர் நீளத்திற்கு இரட்டை வாய்க்கால் அமைந்துள்ளது. கடந்த காலங்களில் அமராவதி ஆற்றிலிருந்து இரட்டை வாய்க்கால் பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிடப்பட்டு வந்தது. நாளடைவில் பாசனம் குறைந்தவிட்ட காரணத்தினால் இரட்டை வாய்க்காலில் தண்ணீர் திறந்துவிடுவதில்லை. மழைக்காலங்களில் நகரப் பகுதிகளில் சேகரமாகும் மழைநீர் மட்டும் சென்று கொண்டிருந்தது. இந்த இரட்டை வாய்க்காலில் முட்புதர்கள் ஆங்காங்கே ஏற்பட்டுள்ளதால் மழைநீர் செல்ல வழியில்லாமல் இரட்டை வாய்க்காலிலேயே தேங்கி பொதுமக்களுக்கு சுகாதாரக்கேடு ஏற்படுகிறது. இதனை தவிர்க்கும்வகையில் UIDSSMT திட்டத்தில் 2006–2007ம் ஆண்டில் ரூ.3.50கோடி மதிப்பீட்டில் 2000.00மீட்டர் நீளத்திற்கு இரட்டை வாய்க்கால் சீரமைக்கப்பட்டது. மேலும் 2018–2019ம் நிதியாண்டில் IUDM திட்டத்தின்கீழ் ரூ.3.62கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு சுமார் 640மீட்டர் நீளத்திற்கு பணிகள் நடைபெற்று வருகிறது.

மேலும் இரட்டை வாய்க்கால் பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்து இலகுரக வாகனம் செல்லும் வகையில் சாலை அமைக்கும் பணியினை 435 மீட்டர் நீளத்திற்கு மேற்கொள்ள ரூ.2.50கோடி மதிப்பீட்டிற்கு நிதி ஒதுக்கீடு வேண்டி உதவி இயக்குநர், கனிம வனத்துறை, கரூர் அவர்களிடம் விரிவான திட்ட கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கரூர் நகராட்சிக்குட்பட்ட இரட்டைவாய்க்கால் பகுதிக்கு அருகில் வசிக்கும் தொழிலாளர்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோரின் பொதுசுகாதார நலனை கருத்தில் கொண்டு நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள இரட்டை வாய்க்காலில் மழைநீர் தேங்காவண்ணம் மீதமுள்ள 625 மீட்டர் நீளத்திற்கு புதிதாக மழைநீர் வடிகால் அமைத்து இலகுரக வாகனம் செல்லும் வகையில் சாலை அமைக்கும் பணியினை மேற்கொள்ள ரூ.4.25கோடிக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணிக்கான விரிவான திட்ட கருத்துருவிற்கு உரிய நிர்வாக அனுமதியும், அரசின் சிறப்பு திட்ட நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து தர கோரியும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம். (இ1/2484/2020)

தீர்மான எண்.2407 அனுமதிக்கப்பட்டது.

2)கரூர் நகராட்சிக்கு Kfw திட்டத்தின்கீழ் ரூ.2467.00 இலட்சம் மதிப்பீட்டில் கரூர் பகுதியில் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு 90 சதவீதம் பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. இத்திட்டத்தில் கீழ்கண்ட விபரப்படி நிதி ஒதுக்கீடு மற்றும் கடன், மானியம் நகராட்சி பங்குத் தொகை ஆகியவை விபரம்.

| வ.எண் | விபரம் | தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | TNUDF (Loan) கடன் | 1480.00 |
| 2 | Kfw திட்ட மானியம் | 740.00 |
| 3 | நகராட்சி பங்குத் தொகை | 247.00 |
| | **மொத்தம்** | **2467.00** |

இத்திட்டத்தில் TNUIFSL நிறுவனத்திலிருந்து கடன் மற்றும் மானியம் வரப் பெற்றுள்ளது. மேலும் கரூர் நகராட்சிக்கு கீழ்கண்ட விபரப்படி கடன் மற்றும் மானியமாக ரூ.895.00 இலட்சம் வரவேண்டி உள்ளது.

| வ.எண் | விபரம் | வரப்பெற்ற தொகை இலட்சத்தில் ரூ. | வரவேண்டிய தொகை இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | TNUDF (Loan) கடன் | 910.00 | 570.00 |
| 2 | Kfw திட்ட மானியம் | 415.00 | 325.00 |
| 3 | Municipality share Amount (நகராட்சி பங்குத் தொகை) | 246.74 | 0.00 |
| | **மொத்தம்** | **1571.74** | **895.00** |

மேலும் ஏற்கனவே TNUIFSL நிறுவனத்துடன் செய்து கொண்ட கடன் ஒப்பந்தம் 30.06.2020 வரை நீட்டிப்பு செய்து கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.2011, நாள்.31.01.2020ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து மீதி கடன் மற்றும் மானியத் தொகையினை பெற கடன் ஒப்பந்தத்தினை கால நீட்டிப்பு செய்ய மன்றத் தீர்மானம் இயற்றி கடன் ஒப்பந்தம் நீட்டிப்பு செய்து பின் தொகை பெற விண்ணபிக்க TNUIFSL நிறுவனத்தின் தொலைபேசி செய்தியில் கேட்டுக் கொள்ளப்பட்டது. எனவே கடன் ஒப்பந்தக்காலம் 30.06.2021 வரை நீட்டிப்பு செய்து கொடுக்கவும் உரிய கடன் / மானியத் தொகையினை விடுவிக்க TNUIFSL நிறுவனத்தை கேட்டுக் கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு
கடன் ஒப்பந்தத்தினை நீட்டிப்பு செய்து உரிய தொகை விடுவிப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
(இ1/5808/2006)

தீர்மான எண்.2408 அனுமதிக்கப்பட்டது.

3)கரூர் நகராட்சிக்கு Kfw திட்டத்தின்கீழ் ரூ.1857.00 இலட்சம் மதிப்பீட்டில் இனாம்கரூர் பகுதியில் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் 87சதவிகிதம் முடிக்கப்பட்டு மீத பணிகள் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தில் கீழ்கண்ட விபரப்படி நிதி ஒதுக்கீடு மற்றும் கடன், மானியம் நகராட்சி பங்குத் தொகை ஆகியவை விபரம்.

| வ.எண் | விபரம் | தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | TNUDF (Loan) கடன் | 1114.00 |
| 2 | Kfw திட்ட மானியம் | 557.00 |
| 3 | நகராட்சி பங்குத் தொகை | 186.00 |
| | **மொத்தம்** | **1857.00** |

இத்திட்டத்தில் TNUIFSL நிறுவனத்திலிருந்து கடன் மற்றும் மானியம் வரப் பெற்றுள்ளது. மேலும் கரூர் நகராட்சிக்கு கீழ்கண்ட விபரப்படி கடன் மற்றும் மானியமாக ரூ.665.00 இலட்சம் வரவேண்டி உள்ளது.

| வ.எண் | விபரம் | வரப்பெற்ற தொகை இலட்சத்தில் ரூ. | வரவேண்டிய தொகை இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | TNUDF (Loan) கடன் | 816.00 | 298.00 |
| 2 | Kfw திட்ட மானியம் | 390.00 | 167.00 |
| 3 | Municipality share Amount (நகராட்சி பங்குத் தொகை) | 185.66 | 0.00 |
| | **மொத்தம்** | **1206.00** | **465.00** |

மேலும் ஏற்கனவே TNUIFSL நிறுவனத்துடன் செய்து கொண்ட கடன் ஒப்பந்தம் 30.06.2020 வரை நீட்டிப்பு செய்து கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.2012, நாள்.31.01.2020ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து மீதி கடன் மற்றும் மானியத் தொகையினை பெற கடன் ஒப்பந்ததத்தினை கால நீட்டிப்பு செய்ய மன்றத் தீர்மானம் இயற்றி கடன் ஒப்பந்தம் நீட்டிப்பு செய்து பின் தொகை பெற விண்ணப்பிக்க TNUIFSL நிறுவனத்தின் தொலைபேசி செய்தியில் கேட்டுக் கொள்ளப்பட்டது. எனவே கடன் ஒப்பந்தக்காலம் 30.06.2021 வரை நீட்டிப்பு செய்து கொடுக்கவும் உரிய கடன் / மானியத் தொகையினை விடுவிக்க TNUIFSL நிறுவனத்தை கேட்டுக் கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு
கடன் ஒப்பந்தத்தினை நீட்டிப்பு செய்து உரிய தொகை விடுவிப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
(இ1/5808/2006)

தீர்மான எண்.2409 அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர்
கரூர் நகராட்சி